**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.10.2025**
**OS. No. 145/2016**
**வழக்கு சாட்சி PW.1–ராமசந்திரன் , த/பெ. பெருமாள்நாயுடு**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை, வாதி தேவன் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இதற்கு முன்பு எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் எந்த வழக்கிலும் சாட்சியம் அளிக்கவில்லை. நான் விவசாயம் மற்றும் பூ வியாபாரம் செய்து வருகிறேன். வாதி தேவன் எனக்கு தூரத்து முறையில் பங்காளி முறை வேண்டும். நான் சுமார் 100, 200 பஞ்சாயத்துக்கள் ஊர் நாயுடுவாக இருந்து நடத்தியுள்ளேன். பஞ்சாயத்து பேசும் போது எழுதி கொள்வது வழக்கமா என்றால் வழக்கம் தான், நாங்கள் எழுதி தருவதில்லை, பஞ்சாயத்து பேசி வைப்போம், அவர்களே எழுதி கொண்டுவருவார்கள். அவ்வாறு எத்தனை முறை நாங்கள் நடத்திய பஞ்சாயத்து எழுதப்பட்டுள்ளது என்றால் நிறைய முறை எழுதப்பட்டுள்ளது, கணக்கு இல்லை, அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்வேன். அவ்வாறு எத்தனை முறை நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை.

2) நான் ஊர் நாயுடு என்பதை நிரூபிப்பதற்கு அவ்வாறு கையொப்பம் போட்ட ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தரப்பினர்களுக்கு எந்த வருடம் பஞ்சாயத்து நடந்தது என்றால் 2016 ல் நடந்தது. என் நிரூபண வாக்குமூலத்தில் 2016 ல் பஞ்சாயத்து நடந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சர்வே எண்கள் எனக்கு 2016 லிருந்து நினைவுள்ளதா என்றால் ஆமாம். 2016 ல் வேறு யாருக்கேனும், எந்த சர்வே எண்ணில் கண்ட சொத்திற்கு பஞ்சாயத்து நடத்தினேன் என்றால் நினைவில்லை.

3) என் நிரூபண வாக்குமூலத்தில் ச.எண்.359/1F2 என்ற சர்வே எண்ணை சொல்லியுள்ளேன். அதன் FMB வரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்கண்ட சர்வே எண்ணை சுற்றி என்னென்ன சர்வே எண்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் யார் யார் பிரதிவாதிகள் என்றால் பிரபாகரன், கமலகண்ணன் மற்றும் சரவணன் ஆவார்கள். என் நிரூபண வாக்குமூலத்தில் எத்தனை வருடங்களுக்கு முன்பு பொதுவழி சம்மந்தமாக வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 15 வருடங்களுக்கு முன்பு என்று குறிப்பிட்டுள்ளேன். தேதி, மாதம், வருடம் குறிப்பாக நினைவுள்ளதா என்றால் இல்லை.

4) என் நிரூபண வாக்குமூலத்தில் பொதுவர்கள் முன்பாக பேசி ஒதுக்கப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் அவர்கள் யார் யார் என்று பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையேயுள்ள உறவுமுறை குறித்தும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி தேவனுக்கு சுமார் 3 ஏக்கர் நிலம் பாத்தியம் உள்ளது, அது எந்தெந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் ச.எண்.359/1F2 நிலத்திலிருந்து எந்த சர்வே எண்ணில் உள்ள நிலத்தின் வழியாக எந்த சர்வே எண்ணில் கண்ட நிலத்திற்கு செல்லவேண்டும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான், பஞ்சாயத்து ரோடு வழியாக செல்லவேண்டும்.

5) மேற்கண்ட பஞ்சாயத்து ரோடு எந்த திசையில் உள்ளது என்றால் கிழ, மேலாக உள்ளது. மேற்கண்ட விவரத்தையும் நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் வீடு என்று குறிப்பிட்டுள்ள வீட்டிற்கான கதவு எண் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு சர்வே எண், கதவு எண் குறித்து தெரிந்து கொள்ளவில்லையா என்றால் இல்லை. பிரபாகரன் என்பவர் வாதி தேவனுக்கு தம்பி ஆவார். 1ம் பிரதிவாதி கமலகண்ணன் மற்றும் 2ம் பிரதிவாதி சரவணகுமார் ஆகியோர்கள் மேற்கண்ட பிரபாகரனின் பிள்ளைகள் என்றால் சரிதான்.

பிரபாகரன் எந்த வருடம் காலமானார் என்றால் எ னக்கு தெரியவில்லை, சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். வாதி தேவன் மற்றும் மேற்கண்ட பிரபாகரனின் தந்தை பெயர் கண்ணப்பன் ஆகும்.

6) பிரதிவாதிகளின் தாத்தா கண்ணப்பன் பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பஞ்சாய்ததின் போது சொன்னார், மேலும் 1, 2 பிரதிவாதிகள் அவரை அடித்துவிட்டதாகவும் அதனால் வாதிக்கு தடம் இல்லாத காரணத்தினால் 20 ரூபாய் பத்திரத்தில் எழுதிக்கொடுத்தாக எங்களிடமும் கையொப்பம் பெற்றார். கண்ணப்பன் எந்த வருடம் காலமானார் என்றால் 2019 ல் காலமானார். 1, 2 பிரதிவாதிகள் மீது கண்ணப்பன் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் 2015 ல் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். கண்ணப்பன் இறக்கும் வரை அவர் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்படவில்லை என்றும், அது தற்போதும் ஊர்ஜிகத்தில் தான் உள்ளது என்றால் சரிதான்.

7) கண்ணப்பனுக்கு மொத்தம் 3 மகன்கள் மற்றும் 2 மகள்கள் அதில் தனசேகர் மற்றும் பிரபாகரன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். இரண்டு மகள்களும் உயிருடன் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த இரண்டு மகள்களும் கண்ணப்பனின் வாரிசுகள் தான் என்றால் சரிதான். அவர்களின் பெயர் ராஜேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகும். 1, 2 பிரதிவாதிகள் அடித்துவிட்டதாக நான் சொல்லும் மேற்கண்ட விவரத்திற்கு கண்ணப்பன் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளரா என்றால் இல்லை. வாதி தடவழி கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார், வேறு பரிகாரம் கேட்டுள்ளாரா என்று எனக்கு தெரியவில்லை. 2015 ல் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் படித்து பார்க்காததால் அதில் என்ன சர்வே எண் மற்றும் சக்குபந்திகள் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9) கண்ணப்பன் 2015 ல் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்து 1997 ல் அவர் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரிதான். 1997 ல் இருந்து அவருடைய அனுபவத்தில் தான் அந்த சொத்து இருந்தது என்றால் சரிதான். அவரது சுயசம்பாத்திய சொத்தை அவர் யாருக்கு வேண்டுமானலும் எழுதி கொடுக்கலாம் என்றால் சரிதான், தடவழியை வாதிக்கு தான் எழுதி கொடுத்துள்ளார். 2015 ல் இருந்து தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்து 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது. நான் 20 ரூபாய் பத்திரம் என்று சொல்வது எந்த வருடம், எந்த தேதி, எந்த மாதம் எழுதப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை, சுமார் 2016 ல் இருக்கலாம்.

10) அந்த 20 ரூபாய் பத்திரம் பதிவு செய்யப்படாத பத்திரமா என்றால் ஆமாம். அந்த 20 ரூபாய் பத்திரத்தில் வழிதடத்திற்கான பஞ்சாயத்து முச்சலிக்கா என்று எழுதப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்று இ.ம.எண்.1/2022 தாக்கல் செய்யப்பட்டு, அது 09.03.2022 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் மேற்கண்ட மனுவின் உத்தரவில் 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறுவது போல் போலியான ஆவணமா என்பதை பரிசீலனை செய்தததில் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் முதல் இரண்டு பக்கத்தில் கையொப்பம் எதுவும் காணப்படவில்லை, 3 வது பக்கத்தில் செட்டில்மெண்ட் செய்வது என்ற இடத்தில் கண்ணப்பன் என்பவரின் கையெழுத்தும், அதற்கு கீழ் சாட்சிகள் என்ற இடத்தில் சாட்சிகளின் கையெழுத்தும் உள்ளதாகவும், பத்திரத்தை 02.09.2013 ல் எழுதி கொடுப்பதாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் பத்திரமானது அதற்கு பின்னிட்டு 24.09.2013 ல் வாங்கியதாகவும், எனவே அந்த ஆவணம் போர்சரியாக உருவாக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்ற உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த போர்சரியான ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றும், அதனால் என் சாட்சியத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது என்றால் சரியல்ல.

11) 2015 ல் தானசெட்டில்மெண்ட எழுதி வைத்த காலத்திலிருந்து 1, 2 பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றும், நான் முதல் விசாரணையில் சொல்வது போல் அதில் எந்த தடமும் இல்லை என்றும், பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு சென்று வருவதற்கு வேறு வழிதடம் உள்ளது என்றும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தானசெட்டில்மெண்ட் மூலம் பெற்ற சொத்தை அனுபவிப்பதை தடுப்பதற்காக நானும், இதற்கு முன்பு சாட்சியம் சொன்ன நபர்களும் வாதிக்கு ஆதரவாக செயல்படுகிறோம் என்றால் சரியல்ல. வாதியின் சகோதரர் இறந்துவிட்டதால் அவரது பிள்ளைகளான 1,2 பிரதிவாதிகள் சிறு வயதுகாரர்கள் என்பதால் அவரை மிரட்டி வாங்கிகொள்ள வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) போர்சரியான ஆவணத்தை உருவாக்க நானும் உடந்தையாக இருந்ததால் 1, 2 பிரதிவாதிகள் என் மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்ய உள்ளார்கள் என்றால் அது போர்சரியான ஆவணம் இல்லை. வாதி ஒருபோதும் வழிதடத்தில் செல்லவில்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஊர் நாயுடு என்று சொல்வதும் தவறு என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்காக நான் பஞ்சாயத்து செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மோசடியாக அடுத்தவர்கள் நிலத்தை பிடிங்கி கொடுப்பதற்காக வேண்டி வாதியுடன் சேர்ந்து பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

13) FMB வரைபடத்தில் நாங்கள் சொல்லும் தடவழி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஆனால் நிலையில் உள்ளது. அவ்வாறு நிலையில் இருந்திருந்தால் FMB வரைபடத்தில் வருவாய் துறையினரால் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.